தீபம்

# ஆத்மஜோதி

ஒளி : 04

ஆத்மீக மாத சஞ்சிகை

ஆவணி : 2005



சுப்பிரமணிய சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த தவணையில் ஓடர் நகைகளை
தரமான 22 கரட் தங்க நகைகளில் செய்து தர
யாழ் நகரில் நம்பிக்கையான நகைமாடம்



# மைதிலி நகைமாடம்


## MAITHELY NAGAI MAADAM



89 V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே : 021-2227902, 077- 6092154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவமயம்

ஆத்மஜோதி

தாபிதம் : 1948

ARTHMAJOTHY

Est. 1948

ISSN 17039185

தீபம் : ஒளி

பார்திப வருடம்

ஆவணி

2005



பதிப்பாசிரியர்

நா. முருகையா

தியான மணிமண்டபம்



எழுத்தமைப்பும்

அச்சுப் பதிப்பும்

ஜய்ராம் பிறின்ரேஸ்

வெளியீடு

ஆத்மஜோதி

தியான மணிமண்டபம்

ஏழாலை.

பதிவு இல:

HA/4/JA/199



தொடர்பு முகவரி

நா.முருகையா,

ஊரெழு கிழக்கு,

சுன்னாகம்.


# உள்ளடக்கம்


1. இறை ஒளி பெருகி வாழி 03
2. விஷவாம்மா விசாலாட்சி அம்மை பாரதக்கதை 04
3. நல்லூர்க் கந்தனுக்கு நல்லதோர் அர்ச்சனை 06
4. இந்துசமய வளர்ச்சியில் புங்குடுதீவு 08
5. திருவாக்கு 12
6. செல்வச் சந்நிதித் திருத்தலமும் ஆனந்தா ஆச்சிரம திருமடமும் 14
7. திருக்கோணமலையில் சைவ வளர்ச்சி 18
8. பெரிய புராணத்தில் சிவ வழிபாடு 22
9. யோக சுவாமிகள் 25
10. சைவ வரலாற்றில் இணுவிலின் பங்கு 33
11. சுவாமிக்கு இலக்கணம் 36


| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை விழா

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் நால்வர் சிலைகள் அமைத்து பன்னிரு திருமுறை ஓதி வடமாநிலத்தில் கிராம ரீதியாகத் திருமுறை விழா நடத்துகிறார்கள். நீராவியடி வீரகத்தி விநாயகர் கோயில், யாழ்ப்பாணம் சந்திரத்துச்சந்தி, வில்லூன்றி, வேலணை, புங்குதீவு, சர்வோதயம் ஆகிய கிராமங்கள் ஊடாக ஐந்தாம் திருமுறையுடன் கொண்டு வருகிறது. ஆத்மஜோதி முத்தையா அவர்கள் பாதயாத்திரை கோயில்கள் கிராம ரீதியாக நடத்தினார்கள். திருமுறை மன்றத்தினர் கிராம ரீதியாக விழா எடுக்கின்றார்கள். ஒவ்வொரு கிராமத்தினரும் முன்கூட்டியே அவர்களுடன். கலந்து விழாவுக்கு வரவேற்பு அளித்து திருமுறைகள் அழியா வண்ணம் பாதுகாப்பீர்களாக.

நன்றி

ஆத்மஜோதி மண்டப
சபையினர்
ஏழாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை ஒளி பெருக வாழி

முத்திசேர் ஆத்ம ஞானி
முத்தையா வள்ளல், ஓங்கும்
மெத்துமைம் பத்தெட்டாண்டு
மேலான காலம் முன்பு
பத்திசேர் ஆத்ம ஜோதி
பயில் நாவற் பிட்டிதன்னில்
இத்தசஞ் சிகையாய், எங்கும்
திருவுலா வர வகுத்தார்

சமயதத் துவங்கள் பேசும்
சஞ்சிகை, அவரின் பின்பு
நமக்கினிக் கிடைக்கா தென்று
நாடெலாம் மனம் வருந்த
இமக்கிரி விளக்காய் மேவும்
எம்மன்பர் முருகையாவின்
தமிழ்ச்சிவப் பணியாய் மீண்டும்
தளிரத்தன்மை கண்டேன் வாழி

அன்புடன் அறம்வளர்க்கும்
அருள் ஆத்ம ஜோதி வாழி
முன்பொலி தவத்துச் செம்மல்
முருகையாத் தொண்டன் வாழி
பொன்பொலி தியான மன்றம்
பொதிகைமா மலை போல் வாழி
இன்பமார் சைவமக்கள்
இறை ஒளி பெருகி வாழி

- சுபம் -

**அருட்கவி**

**சீ. விநாசித்தம்பி அவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷவாம்மா விசாலாட்சி அம்மை பாரதக்கதை

(சென்ற வாரத்தொடர்ச்சி)

## சந்தனு

### விஷவாம்மா விசாலாட்சி அம்மை பாரதக்கதை

அஸ்ட வசுக்களின் வேண்டுதலுக்கு இணங்கிய கங்காதேவி அழகிய பெண்ணாக வனத்தில் உலாவினாள். தற்செயலாக சந்தனு என்னும் மகாராசன் அவ்விடம் வந்தான். கங்கா தேவியின் அழகில் மயங்கினான். அதனால் அவள் மீது அளவற்ற காமம் கொண்டான். அவள் யாரென்று அவன் அறியவில்லை.

"அழகிய பெண்ணே! நீ யாராக இருந்தாலும் எனக்குத் துணைவியாக வரவேண்டும்" எனப்! பிரார்த்தனை செய்தான். "தேவி என்னுடைய எல்லா இராட்சியமும் உனக்கே தந்தேன். என்னை அடைவாயாக" என்று யாசித்து வற்புறுத்தினான்.

கங்காதேவி சந்தனுவின் வேண்டுதலுக்கு இணங்கினாள். "அரசனே ஓர் நிபந்தனை, நான் விதிக்கும் பல நிபந்தனைகளை நீ மீறுவதில்லையென்றால், நான் உனக்கு மனைவியாக இருப்பேன். எப்போது நீ என் நிபந்தனைகளுள் ஒன்றையாயினும் மீறுகிறாயோ அப்போது நான் உன்னை விட்டு விலகி விடுவேன்" என்று கூறினாள்.

"என்னை யாராவது, நீயாவது யாரென்று கேட்கக்கூடாது. எந்தக் குலத்தவள் என்று எந்தச் சமயத்திலும் விசாரிக்கக் கூடாது. எந்த நேரத்திலும் என்னைக் கோபிக்கக்கூடாது. நான் நல்லதோ கெட்டதோ என்ன செய்தாலும் ஏன்? என்று கேட்கக்கூடாது. பிரியமற்ற சொற்களை என்னிடம் கூறக்கூடாது. இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதானால் நான் உன் மனைவியாக இருப்பேன். ஒரு நிபந்தனையை மீறினாலும் நான் உன்னை விட்டு விலகி விடுவேன்" என்று கங்கா கூறினாள்.

கங்காவின் நிபந்தனைகளுக்கு அரசன் சந்தனு இணங்கி கங்காவைத் திருமணம் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனும் கங்காவிடம் அளவற்ற அன்பு கொண்டு அவளுக்குப் பிரியமான அமிர்தமான வார்த்தைகளைப் பேசி வந்தான். கங்காவும் மிகவும் மகிழ்ந்து இன்பமாக சந்தனுவுடன் கூடி மகிழ்ந்தாள்.

கங்காதேவிக்கும் சந்தனுவிற்கும் அழகான ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது ஆயிரம் கோடிப் பிரகாசமுடையதாகக் காணப்பட்டது. இதைக் கண்ட சந்தனு பேரானந்தம் அடைந்தான்.

ஆனால் சந்தனுவின் ஆனந்தம் நீடிக்கவில்லை. ஏனெனில் குழந்தை பிறந்தவுடனேயே கங்கா அதனைத் தூக்கிக் கொண்டுபோய் கங்கையில் வீசிவிட்டு எதுவித கவலையுமில்லாமல் முகமலர்ச்சியுடன் வந்தாள்.

சந்தனுவுக்கு அவளின் செயல் அருவருப்பாகவும் கவலையாகவும் இருந்தது. அவளின் நிபந்தனைகளை நினைத்து பேசாது இருந்தான். இவ்வாறு தனக்குப் பிறந்த ஏழு ஆண் குழந்தைகளையும் கங்கா நதியில் வீசி வந்தாள்.

அரசன் கங்காதேவியின் அருவருப்பான செயல்களால் மிகுந்த கோபமும் அடக்க முடியாத துக்கமும் வேதனையும் அடைந்தான்.

எட்டாவது குழந்தையும் பிறந்தது. அக்குழந்தையையும் தாயாகிய கங்கா தூக்கிக் கொண்டு கங்காநதியை நோக்கி வேகமாகநடந்தாள். அப்போது சந்தனு மிகுந்த கோபமும் கவலையுமுடையவனாகி உரத்த குரலில் "நில் நில்" என்றான். "ஏன் இந்தக் கொடிய பாவத்தைச் செய்கின்றாய். பெற்ற பிள்ளையைச் சிறிதும் இரக்கமில்லாமல் ஏன் கொல்கிறாய். இதுவரை ஏழு ஆண் குழந்தைகளையும் கொன்று விட்டாய். இந்தக் குழந்தையை மட்டும் கொல்லாமல் என்னிடம் தந்து விடு எனக்குப் பின் இவன் முடிசூடட்டும்" என்று கெஞ்சலாகக் கேட்டான்.

"அரசனே! என் நிபந்தனைகளை நீ மறந்து விட்டாய். நீ உன் மகனிடம் அதிக விருப்பம் கொண்டமையால் நான் உன்னை விட்டு விலகுவேன். அதற்கு முன் நான் யார்? ஏன் குழந்தைகளைக் கொன்றேன் என்ற வரலாறு கூறுவேன் கேட்பாயாக" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனுக்கு
# நல்லதோர் அர்ச்சனை

அப்புனத்திற் சண்முகனார் அண்ணா எனவழைக்க
ஒப்புடனே சென்றங் குருக்காட்டித் - துப்புறழ்வாய்
வள்ளிமணம் பூணவைத்த வாரணனே நாயடியேன்
உள்ளமிசை நின்றான் உதவு.

1. ஆனைமுகற் கிளையவனே போற்றி போற்றி
அம்பலவா ணன்மகனே போற்றி போற்றி
வானவர்கள் அறியாத மணியே போற்றி
மருவுமடி யார்க் குதவும் மருந்தே போற்றி
தேனமுதத் தமிழ்தந்த செல்வா போற்றி
தெய்வகுஞ் சரிவள்ளி கணவா போற்றி
ஞானமறை தந்தருளும் நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

2. சீரான படையாறில் திகழ்வாய் போற்றி
சிவகுருவாய் உபதேசம் செய்தாய் போற்றி
போரான சிவசோதிப் பிழம்பே போற்றி
பேணுபுவி யத்தனைக்கும் பெரியோய் போற்றி
சூரான வேல்பிடித்த குமரா போற்றி
கொக்கரிக்கும் செஞ்சேவற் கொடியாய் போற்றி
நாரா யணன்மகிழும் மருகா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

3. பலகலையின் வடிவான பரமா போற்றி
பழநிமலை வீற்றிருக்கும் பாலா போற்றி
கலசமுனிக் கருள்சுரந்த கனியே போற்றி
கற்கிமுகி தனைமடித்த களிறே போற்றி
திலகநுதற் பார்வதியாள் சேயே போற்றி
தேம்பியநக் கீரன்நோய் தீர்த்தாய் போற்றி
நலமான நமசிவயப்பொருளே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பண்ணிசையும் பைந்தமிழு மானாய் போற்றி
பரவுமடி யார்சுவைக்கும் பழமே போற்றி
எண்ணாகி எழுத்தாகி நின்றாய் போற்றி
இருநிலநீர் தீவளவா னானாய் போற்றி
கண்ணுதலான் தந்தமுதற் கடவுள் போற்றி
கானமயில் ஏறிவரும் கதிரே போற்றி
நண்ணுகிற பரயோக நடனா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

5. தீதுமலி சூர்குலம் செறுத்தாய் போற்றி
தினைப்புனத்தில் மான்தேடிச் சென்றாய் போற்றி
சீதமிகு தேன்தினைமா தின்றாய் போற்றி
திகழ்வேங்கை மரமான செல்வா போற்றி
ஓதுபெயர் முட்டையென உரைத்தாய் போற்றி
ஓம்பொருளைக் கேட்டவனை உதைத்தாய் போற்றி
நாதமொடு விந்தான நலமே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

6. தீயவினை தீர்த்தருளும் தந்தாய் போற்றி
திரைநரைமூ தாட்டிகவி கேட்டாய் போற்றி
தூயபரம் பொருளான சுடரே போற்றி
தொன்றுமுடி வில்லாத சோதீ போற்றி
நேயமுணர் நெஞ்சினிக்கும் விமலா போற்றி
நீலமயி லேறிவரும் நீபா போற்றி
நாயகமாய் நல்மருளும் நலமே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமய வளர்ச்சியில் புங்குடுதீவு

- வித்துவான் பொன்.அ.கனகசபை -

புங்குடுதீவு தெய்வமணங் கமழுந் திருநாடு, திரை மணக்கும் புகழ் பூத்த பொன்நாடு. வல்லிபுரம் பொன்னேட்டில் இந்நாட்டின் புகழ் பொறிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்நாடு தெய்வப்பேரவைத் தலைவரால்: 'சித்தாந்தச் சிவபூமி' என வருணிக்கப்பட்ட பெருமை உடையது இந்நாடு 'இந்நாட்டில் வைதிகம் மணக்கின்றது.' எனப் பாராட்டினார் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானகிராமணியார். இரத்தின துவீபம் எனப் பெயர் பெற்ற இந்நாட்டில் வேதாந்தம் சித்தாந்தம் என்ற வேறுபாடின்றி இந்து சமயத்தவர் எல்லோரும் இன்புற்று வாழ்கின்றனர். எக்காலமும் இறைவன் திருவுளத்திற்கு ஏற்புடைத்தாயிருப்பதும் இந்நாடே. இலங்கைத் தமிழர், சிலப்பதிகாரவிழா எடுப்பதற்காகப் போட்டுப்பார்த்த திருவுளச்சீட்டு இந்தநாட்டையே தேர்ந்தெடுத்தது. இலங்கை தமிழரசுக்கட்சி, மகாயாகஞ் செய்வதற்குத் திருவுளச் சீட்டின் மூலந் தெரிந்தெடுத்த நாடும் இதுவே.

நிலத்தியல்பால் நீர் திரியும் என்பர் சான்றோர். புங்குடுதீவின் நீர்வாசி நிலவாசியால் இந்நாட்டில் இடம்பெயர்ந்து வந்துறையும் மக்கள்கூட மனந்திருந்து மாண்புற்று வாழ்கின்றனர். 'சந்தொடுதரளந் திரைகொழித்து ஒதுக்குஞ்' சமுத்திரத்தாற் சூழப்பட்டிருக்கின்றது புங்குடுதீவு. சமுத்திராதேவி நாள்தோறும் நாற்புறமும் வலம் வந்து, நாவாரப் பிரணவ நாதகீதம் பாடி, அலைக்கரத்தால் அஞ்சலி செய்கின்றாள். புங்குடுதீபக மக்கள் அடுதீ அல்லது சுடுதீ அறியார்; கார்த்திகைத் தீபத்திலுங் கண்ணுதற் பெருமானின் சோதிசொருபத்தையே காண்பார்கள். இன்னும் இந்து சமயக் கிரியை நெறி நின்று அக்கினி காரியஞ்செய்து அருள்நெறி வளர்க்கின்றனர். புங்குடுதீவில் வீசுந் தென்றற் காற்றிலே, சேதுலிங்கப்பெருமானின் திருப்பாத தூளி பரிமளிக்கும், இங்கு வீசும் வாடைக்காற்றிலே, சிவபெருமான் திருமுடியிற் சூடுந் திருக்கொன்றை மலர்மணஞ் செறிந்திருக்கும், புங்குடுதீவின் மேலேயுள்ள அருள் வான வெளியிலே, நிலம், நீர், நெருப்பு, காற்று என்பவற்றின் காரண பூதங்கள் கலந்து, அருவடிவாக அடங்கியிருக்கின்றன. ஆகாய மார்க்கமாக அசைந்து செல்லுஞ் சூரிய சந்திரர்கூட இங்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமக்களின் வணக்கத்திற்குரிய தெய்வ வடிவங்களே. சிவனடியாரையுஞ் சிவனெனப் போற்றுஞ் செம்மையுள்ளவர் இந்நாட்டினர். அடியார் வழிபாடு இத்தீவகத்தாருக்குக் கைவந்தகாரியமாகும்

"கொண்டுவந்து மனைப்புகுந்து குலவுபாதம் விளக்கியே
மண்டுகாதலின் ஆசனத்திடை வைத்தருச்சனைசெய்த பின்
உண்டி நாலு விதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர்நாயகர் தொண்டரிச்சையின் அமுதுசெய்ய அளித்துளார்"

என்ற சேக்கிழார் வாக்கு,

இங்கு செயற்பாட்டில் இருக்கின்றது. ஐம்பெரும் பூதமும் ஆதித்தனுஞ் சந்திரனும் ஆன்மாவும் ஆகிய எண்பெருவடிவங் கொண்ட இறைவனை, இங்குள்ள இந்துக்கள் இடையறாது வணங்குகின்றனர்.

"எட்டுக் கொண்டார்தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்
விட்டார் உலகமென் றுந்தீபற
வீடே விடாருமென் றுந்தீபற"

என்ற உய்யவந்தார் கூற்றுக்கிணங்க எட்டுருவங் கொண்ட எம்பெருமானை மனத்தாலே தொட்டுக் கொண்டே வாழ்வாங்கு வாழ்ந்து இம்மையிலேயே இன்பங் காணுகின்றனர் இத்தீவக இந்துமக்கள்.

**சமயநிலை**

சரித்திர ஆராய்ச்சிக்கு முற்பட்ட காலத்திலிருந்தே புங்குடுதீவு இந்துசமயத்திற்கு ஓர் உறைவிடமாக இருந்ததென ஊகிக்க முடிகின்றது. நிலமும், நீர்நிலையும், நிலம்பெயராதுறையும் மக்கள் உள்ளப்பண்பாடும், பேச்சுமொழியும் இதற்குச் சான்றுபகருகின்றன. இடப்பெயர்களும், காணித்தோப்புகளும், மூதாதையர் பெயர்களும் தமிழர்தம் பொற்காலம் எனப்படும் சங்ககாலத்தைச் சார்ந்த இந்துசமயப் பெயர்களாகவே காணப்படுகின்றன. புறநானூற்றிற் காணப்படும் புறத்திணைச் செய்திகளை வெட்சியாமுனை, வியப்புலி கரந்தலி, பாணாவிடை போன்ற இடப்பெயர்கள் இன்றும் எடுத்து விளக்கிக் கொண்டிருக்கின்றன. இங்கு வாழ்ந்த ஆதிகுடிமக்கள் நாகர்கள். அவர்கள் வழிபட்ட நாகதம்பிரான் கோயிலும் நாகேஸ்வரர் கோயிலும் இடைக்காலத்தில் அழிக்கப்பட்டன ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று புதுப்பிக்கப்பெற்று வழிபாட்டுத் தலங்களாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இந்து சமயப் பழம் பெயர்கள் இன்று வழங்கிழந்து வருகின்றன. நாகன்,மாதன்,கந்தன்,மூலன் போன்ற பெயர்கள் வழக்கிலிருக் கின்றன.

நாடு அந்நியர் ஆட்சிக்குட்பட்ட பொழுது இந்து சமய ஒளி மங்கியது. புராதன இந்து சமயத் திருக்கோயில்கள் இடித்தழிக்கப்பட்டன. கோயிலிருந்த இடங்கள் அடவி காடாயின. அக்காடுகளை மக்கள் கோயிற் காடென்றே அன்றும், அழைத்தனர், இன்றும் அழைக்கின்றனர். திருக்கோயில்களை அழித்தவர்கள் புங்குடுதீவின் மத்தியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றைக் கட்டினார்கள். இந்துக்கள் அத்தேவாலயத்தை வெள்ளைக்காரன் கோயில் என அழைத்தனர். ஊர்மக்கள் அனைவருங் கிறிஸ்தவ தேவாலயத்திற்குத் தினந்தோறுஞ் செல்லத்தக்கதாகக் கட்டாய விதிகளை ஆக்கினர். தேவாலயத்திற்குச் செல்லாதோரை நிர்ப்பந்தப் படுத்தினர். இந்துசமய அபிமானிகள் மனம் நொந்தனர். தத்தம் அகக்கோயிலில் வைத்துத் தெய்வத்தைத் தியானித்தனர். திண்ணைப் பள்ளிக்கூடங்களும், புராணபடனமும், தென்னிந்தியத் தலயாத்திரையுமே இந்து சமயத்திற்குப் புகலிடமளித்தன. ஏழு தலைமுறைக்கு முன்னர் வாழ்ந்து சேதுநாதர் என்பவர். பாத யாத்திரையாக காசிக்குச் சென்று மீண்டார். மீண்டவர் குளந்தொட்டு நிழல் மரம் நாட்டினார். திண்ணைப் பள்ளிக்கூடமும், புராண வகுப்பும் நடத்தி இந்துசமயத்தை மறைந்து விடாமற் பாதுகாத்தார்.

பிற்காலத்தவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களை அணுகிக் கருவி நூல் முதநூல்களைப் பாடங்களை கேட்டனர். அவர் மாணவரும் மருகருமான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் புராண இதிகாசங்களைப் பயின்றனர். அங்ஙனம் பயின்ற அன்பர் பலர் புங்குடுதீவின் பல இடங்களிலும் புராணப்படிப்பை விரிவான முறையில் நடத்தினர். இந்து சமயத்தவர் நூற்றுக் கணக்கானோர், காப்புக்கட்டி விரதமிருந்து புராணப்படிப்பைக் கேட்டனர். புராணப் படிப்பால் உண்டாகிய இந்து சமய ஆர்வமே புங்குடுதீவிற் பல புதிய கோயில்கள் தோன்றுவதற்குக் காலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோயில்கள்

ஆதிசங்கரர் காலத்திலிருந்த அத்தனை சமயங்களும் இந்நிலத்திலிருந்தன. அவற்றையெல்லாம் வகுத்துச் சண்மத தாபனஞ் செய்தார சங்கரர். சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்ற ஆறுமே சங்கரர் வகுத்த சண்மதங்கள். இவையே இந்துசமயம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. இவற்றிற்குரிய தனித்தனி ஆலயங்கள் இத்தீவகத்தில் இருக்கின்றன. இருப்பினும் அவையாவும்,

"தெய்வ சிவமே சிவனருள் சமயம்
சைவம் சிவத்தொடு சம்பந்தம்"

என்னுஞ் சைவசமயச் சார்புடையனவாகவே காணப்படுகின்றன. அவையாவற்றிலும் சைவாகம விதிப்படியே தினப் பூசைகளும், திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள இந்துக்களுட் பெரும்பாலோர் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்திகளேயவர்.

சிவன், சக்தி, கணபதி, குமரன் என்னும் நான்கு கடவுளுக்குந் தனித்தனியே திருக்கோயிலமைத்துப் பிரதிட்டை செய்து வழிபட்டு வருகின்றனர். திருமாலையுஞ் சூரியனையும் பரிவார மூர்த்திகளாகவே வைத்து வணங்குகிறார்கள். புங்குடுதீவில் வழிபாட்டுத் தலங்களாகச் சிவன் கோயில்கள் நான்கு, அம்மன் கோயில்கள் ஐந்து, பிள்ளையார் கோயில்கள் ஐந்து, முருகன் கோயில்கள் மூன்று ஆகப் பதினேழு திருக்கோயில்கள் உண்டு. இப்பதினேழு திருக்கோயில்களிலும், தினப்பூசையும் ஆண்டுதோறும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. இருபத்தைந்து சதுரமைல் பரப்புக்கொண்ட புங்குடுதீவில், பதினேழு திருவிழாக் கோயில்கள் அமைந்துள்ளன. இலங்கையின் எப்பகுதியிலும் இவ்வாறமைந்துள்ள திருக்கோயிற் காட்சியைக் காண்பதரிது. கிழக்குத் திசையில் இராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலும், மேற்குத் திசையில் மீனாட்சி சுந்தரேசர் கோயிலும் இராஜகோபுரங்களோடு கூடிச், சிவசக்தி பீடங்களாக அமைந்தது. ஊருக்கு அழகையும் அரட்பிரகாசத்தையும் அள்ளிச் சொரிகின்றன. அடியார்கள் அனைவரும் ஆலயங்கள் அனைத்திலும் உள்ளே பிரவேசித்துக் காதலாகி கசிந்து கண்ணீர்மல்கி வழிபட்டு வருகின்றனர். புங்குடுதீவின் இந்து சமய வளர்ச்சிப் பாதையின் சமாதிக் கோயில்கள் மூன்று தரிசனந்தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம தேவதையான வைரவருக்குத் திருக்கோயில்களிலே சுற்றுப்பிரகாரத்திலும் குடியிருக்கும் வளவுகளிலே கிணறுகளின் பக்கத்திலும் சிற்றாலயம் அமைத்து பொங்கலிட்டு வழிபாடாற்றுகின்றனர். வேள்விக் கோயில்களாகவே அவை விளங்குகின்றன. ஆதிகாலந்தொட்டு இவ்வூர்க் கோயில்களில் உயிர்ப்பலியிடப்படுவதில்லை. நேத்திக் கடனாகக் கூட பசுமாடு, ஆட்டுக்கடா, சேவற்கோழி போன்ற ஜீவராசிகளை கோயிற் காரர் ஏற்றுக்கொள்வதில்லை. சொந்தக்காரர் அவற்றின் பெறுமதியை திருப்பணி உண்டியலில் சேர்க்கலாம். ஊர்ப்புறம் காக்கும் தெய்வமான ஐயனார் கோயில்கள் கிழக்கு, வடக்கு, தெற்கு கடற்கரையோரங்களில் அமைந்துள்ளன. குளக்கரை, தெருக்கரை மரத்தடிகளில் ஆயுத தேவர்களை வழிபாட்டுக்குறிகளாக வைத்து விளக்கேற்றி வணங்குகின் றார்கள். சிறிய கோயில்களானவை கற்பக் கிரகமும் முன்மண்டபமும் கொண்டவையாகவே பெரும்பாலும் அமைந்திருக்கின்றன.

## திருவாக்கு

ஓ மனிதனே சூரியன் ஒருமுறை உதித்து மறைந்தால் உன்வாழ்வில் ஒருநாள் முடிந்துவிடுகிறது. அந்த அளவுக்கு உன் வாழ்வில் ஒருபகுதி குறைந்து விடுகிறது. அந்தக் குறைந்த அளவுள்ள காலத்திற்குள் நீ செய்து முடிக்க வேண்டியவைகளையெல்லாம் செய்யவேண்டி உள்ளது. எனவே எழுந்திரு! தள்ளிப் போடாதே,செயற்படு ஆத்மீக நெறியில் சுறுசுறுப்புடன் செயற்படு.

ஒவ்வொரு நாளும் பிரபஞ்ச நாயகனான இறைவனை வழிபடு வதற்காக விடியற்காலையிலேயே எழுந்துவிடு. அந்த நாளுக்குரிய வேலையைத் தொடங்குமுன் அவனைப் பணிந்துவழிபடு. உன் உள்ளத்தின் அடியிலிருந்து பிரார்த்தனை வரட்டும். நான் உனக்குச் சொந்தமானவன். எல்லாம் உன்னுடைமையே. எல்லாம் உன் விருப்பப்படியே நடைபெறும். நான் உன்னுடைய கைகளிலுள்ள ஒரு கருவியே. நீதான் எல்லாவற்றையும் செய்கிறாய். நீ நியாயமாக நடந்து கொள்கிறாய். உன்னுடன் எனக்கு பக்தியும் நம்பிக்கையும் அருளுவாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை இறைவனோடு இணைத்துக் கொள். அவனுடைய தெய்வீகக் குணங்கள் யாவையும் உனக்குள்ளே பாய்ந்து உன்னை தெய்வீக மயமாக்கி விடும்.

பரமாத்மாவை பிரார்த்தனையின் மூலம் அணுகு. வழிபாடு தியானம், தொண்டு இறைவனுடைய நாமஜெபம் ஆகியவற்றின் மூலமாகவும் அவனோடு தொடர்பு கொள்!

நீ தெய்வீகமானவன். தெய்வீகம் உன்னுடையது. தெய்வீகத்தில்தான் உனக்குச் சொந்தமானவை எல்லாம் இருக்கிறது. இறைவன் உன்னுடையவன். அவன் உனக்கு நெருங்கிய உறவினன். எல்லாவற்றையும் விட நெருங்கியவன், உன்னுடையவன் என்று சொல்லிக் கொள்ளுதற்குரிய ஒரே ஒருவன் இறைவன் தான்.

## அருளமுதம்

### பேச்சு

உண்மையே பேசு
நன்மையே பேசு
அளவாகப் பேசு
மெதுவாகப் பேசு
இனிமையாகப் பேசு
சிந்தித்துப் பேசு
சமயமறிந்து பேசு
சபையறிந்து பேசு
பேசாதிருந்தும் பழகு

### உணவு

பசியறிந்து உண்க
பகிர்ந்தளித்து உண்க
அளவறிந்து உண்க
ஆறுதலாக உண்க
நன்குமென்று உண்க
நல்ல உணவு உண்க
கனிகள் நிறைய உண்க
கடவுள் நினைவில் உண்க
உண்ணாதிருந்தும் பழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதித் திருத்தலமும் ஆனந்தா ஆச்சிரம திருமடமும்

- மீளா அடிமை - ஆனந்தாச்சிரமம், செல்வச்சந்நிதி

"மூர்த்தி தலம்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

- என்பது தாயுமானவர் திருவாக்கு

அதற்கு இலக்கியமாக அமைந்தது தொண்டைமானாற்றில் விளங்கும் செல்வச்சந்நிதி முருகன்கோவிலும் திருமடங்களும்.

'கோயிலும் மடமும் கடலொடு சூழ்ந்த' திருக்கோயில் அது. தொண்டைமானாறு வலம்வரும் இலங்கையின் வடபாலமைந்த, யாழ்ப்பாணத்தின் வடகோடியில் அமைந்த குமரகோட்டம் அது. இலங்கையின் தென்பாலமைந்த தந்திர மந்திர யந்திர மகிமை கொண்ட கதிர்காமத்தின் முருகனது கோலமே தானாக வடகோடியில் அமைந்தது செல்வச் சந்நிதி, அங்கும் ஒரு மாணிக்கப் பிள்ளையார், இங்கும் ஒரு மாணிக்கப் பிள்ளையார், அங்கு ஒரு மாணிக்க கங்கை, இங்கு தொண்டைமானாறு. அங்கு தலவிருட்சம் அரசு, இங்கு பூவரசு, அங்கு ஏழுமலை உச்சியில் திகழும் வெற்றி வேல். இங்கும் மூலஸ்தானத்துள் திகழும் சக்திவேல். தெய்வயானை அம்மன்மடம், இராமகிருஷ்ணமடம், வள்ளியம்மன் மடம், இங்கும் ஆனந்தாச்சிரமம், வள்ளியம்மன் மடம், இராஜ இராஜேஸ்வரி மடம்.

இவ்வாறு மூர்த்தி மகிமை,தலமகிமை, தீர்த்தமகிமை கொண்டதும் கதிர்காமத் தலத்தைக் கண்ணாடியில் நோக்குவது போல அமைந்ததும் ஆன செல்வச் சந்நிதித் தலத்துக்கும் கந்தபுராணக் கலாச்சாரத் தொடர்பு பல.

திருச்செந்தூரில் இருந்து தென்திசை நோக்கி சூரசங்காரம் செய்ய எழுந்த முருகக் கடவுளுக்கு, ஏம கூடம் அமைத்து வீரவாகு தேவராதி அரிபிர மேந்திராதிகள் வழிபட்ட தலம் இச்செல்வச் சந்நிதி என்பது ஐதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அந்தமில் அவுணர்தங்கள் அடல்கெட உதித்த செவ்வேள்
செந்திலம் பதியினின்று தென்பதி ஏமகூடம்
வந்திடும் போதில் வீரவாகு மால் வானவீரர்
சந்தி கண்டித் தலத்தே சரவணற் பூசை செய்தார்”

என்பது செல்வச்சந்நிதி தலபுராணம்-செய்யுள் - 7

வீரவாகு தேவராதியோர் வழிபட்ட பெருமை கொண்ட செல்வச் சந்நிதியில் என்றும் எழுந்தருளி அடியன்பர்க்கு அருளுமாறு வரம் கொண்டபடி அற்புதம் நிறைந்த பதி இச்செல்வச் சந்நிதி. ஏமகூடமான கதிர்காமத்திலிருந்து சூரசங்காரம் செய்தமையும், வீரமாமகேந்திரத்தையும், சூரனையும் அழித்து வடதிசை சிங்கனது அசுரநகரை அழித்ததற்குப் பாடி வீடு கொண்ட பதி இச்செல்வச் சந்நிதியென்பது வரலாறு.

இத்தெய்வப் பழம்பதியான செல்வச்சந்நிதியில் வாழ்ந்த பெரியவர் ‘மருதர் கதிர்காமர்’ என்பவர். ஒருநாள் தொண்டமானாற்றின் ஓரமாக வந்துகொண்டிருந்த வேளை அனாதை போலக் கங்கையின் கிழக்குக் கரையில் நின்ற கோலங்காட்டி “இங்கே வா;எங்கும் நீ கேட்க முடியாத கதை ஒன்று சொல்வேன் கேட்குதி” எனக்கூறி அழைத்து, “செல்வ புஷ்பகரணி” என்ற ஆற்றினோரம் உள்ள செல்வச்சந்நிதியின் வரலாறும், மகிமையும், பெருமையும் கூறி உளங்கனிய வைத்தார். அதிதீவிர பக்குவநிலை கொண்ட கதிர்காமர் நிலை நோக்கி, அரிசி காய்கறிகளை நல்கி, அமுது சமைப்பித்து, கலமாக ஆலமிலைகளை வைத்துப் படைக்கச் செய்து தானும் உடனிருந்துதிருவமுது செய்தருளி, இறுதியில் வள்ளி தேவகுஞ்சரி சமேதரரான மணவாளக்கோலம் காட்டி மறைந்தருளினார்.

தானே வந்து தலையளித்து ஆட்கொண்டருளிய குமரக்கடவுளை கன்றையகன்ற புனிற்றாப்போலக் கதறி அழுது “ஓம் முருகா” என அழைத்து நைந்துருகினார் கதிர்காமர்.

“அப்பனே முருகா! தினைப்புனம் சென்றாயோ?அல்லது தமிழின்பத்து மயங்கி மாமதுரை சென்றாயோ? அல்லது கயிலைக்கு அப்பனிடம் சென்றாயோ? வாரும்; என் கண்களிப்ப வந்தருள்வாய்;” என வாழ்த்தினார். உடனே நீலமயிலில் வேலேந்திச் செம்பவள மேனி தோன்றக் காட்சிதந்து அன்புமொழி கூறி ‘என்னை ஏத்தி இங்கே இருக்க’ என்றார். கதிர்காமர் அழகிய முருகன் இரு சரணங்களையும் பற்றி சிறியேனைப் பிரியாதிங்கே இருக்க வேண்டுமென விண்ணப்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கிசைந்து 'எனது பாதங்களை மலரிட்டு அருச்சித்திருக்குதி என்றும், ஈற்றில் முத்தியின்பம் பெறுகவென்றும்' ஆசீர்வதித்தார். உருகிய அன்பர் 'ஐயனே நின்னை அர்ச்சிக்கும் மந்திரபூசை அறியேன்! எவ்வாறு பூசிப்பேன்? எனக்கு உணர்த்தி அருளவேண்டும் என்றார்.

அதற்கு முருகன் 'கதிர்காமத் தலத்தில் வேடுவர் மரபாக வாய்கட்டி உண்மையன்பின் பூசை செய்தருளும் வகையில் புரிகுதி' என்றார். அப்போது கதிர்காமர் 'ஐயனே! கதிரமலை சென்றறியேன்; கருதும் மௌன பூசை எவ்வாறு செய்ய வல்லேன்?' என்றதும் அன்பு ததும்பத் தன் பன்னிரண்டு கரங்களாலும் கதிர்காமர் இரு கரங்களையும் பற்றி முன்னெப் பொழுதும் காணாத கதிரமலையில் ஏழுமலையான் வடிவேலும் ஆடும் மயிலும் அடியார் கூட்டமும் பக்திப் பூசை பண்ணும் மௌனபூசை முறைகளையும் திரையினுள் மறைந்த இயந்திர இரகசியமும் ஆகிய யாவற்றையும் கணத்தினுள்ளே கண்டுதன்வயமிழந்து பரவசராக அருளினார்.

அந்நிலையில், முருகப்பெருமான் வேல் ஒன்றினைக் கையிற் கொடுத்து 'இதனை, நீர் இருக்கும் செல்வச் சந்நிதியில் பூவரசின் நிழலிலே தாபித்து வழிபட்டு வருகுதி' என்றும் 'இத்தலத்தின் பெயர் செல்வச்சந்நிதி என்றும் வழங்கக் கடவதாக' எனவும் திருவாய் மலர்ந்தருளினார். மேலும், வள்ளி தெய்வானை சமேதரராகத் தொண்டை மானாற்றோரம் அடைந்து வீற்றிருந்தருளினார்.

கோயில் கொண்ட முருகனை வாய்கட்டிக்கதிர்காமர் வழிபாடு செய்ய முருகன் மகிழ்ந்து உறைவார். அப்பரவை ஆற்றோரம் முருகன் களிநடனம் புரிந்து காட்சி தருவான். மேலும் முன்னவனாக கணேச மூர்த்தியோடு செல்வபுஷ்கரணியில் நீந்தி விளையாடுவான். 'இத்தலத்தைத் தரிசிப்போருக்கு நற்சிவகதி உண்டு. இத்தலத்தில் ஒரு தருமம் செய்தவர்க்கு பொன்னும், மணியும் போகமும் மறுமையில் மன்னு சுவர்க்க மாதி வாழ்வுமுண்டு. தர்மங்களில் மேலான தர்மம் அழிபசி தீர்த்தல் அன்னதான மாகும்.

**"அற்றார் அழிபசிதீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி"**

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க இத்தலத்தில் அன்னதான புண்ணியம் செய்தோர் அடையும் பலன் அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உத்தமமே பசிதீர்க்கும் உண்டித்தானம்
உத்தமமே காதலரொத்துதவும் தானம்
உத்தமமே வருந்தாகந் தீர்க்குந் தானம்
உத்தமமே அடியாரைப் பேணும் தானம்"

என்றும் உரைக்கக் கேட்கின்ற மெய்யன்பர்க்கு மேலும் சொல்கிறார்.

"எனக்கினியது அன்பு மலர் மாலையாகும்
எனக்கினியது உண்மை வளர் இதயமாகும்
எனக்கினியது தான தவம் இயற்றும் சாலை
எனக்கினியது தொண்டர் படு மிடர்களை தலே"

என்றும் கூறி

"ஆறெழுத்துப் பசிநோய்க்கு மருந்துமாகும்
ஆறெழுத்துப் பவ நோய்க்கு மருந்துமாகும்"

என்றும் "சரவணபவ" மந்திர மகிமை உணர்த்தி அருளினார். உபதேசம் பெற்ற மெய்யன்பர் கதிர்காமர் அன்று முதல் அப்பூவரச மரத்தின் கீழ் அமர்ந்து முருகனுக்குப் பூசனை புரிந்து வருவாராயினர்.

ஒரு முறை செலவுக்குப் பணமில்லையெனக் கதிர்காமர் வருந்தும் போது முருகப்பிரான் நிலத்து வீழ்ந்த சருகுகளை எடுத்துப் பரீட்சித்த மாத்திரத்தில் பணக்காசுத் தாள்களாக மாறிடக்கண்டு பரவசமானார். தனக்கு உகந்தது தேனும் தினைமாவும் என்றும், கதிரமலை சென்று மீண்டால், களைப்புத் தீர்க்கப் பயிற்றந் துவையலும் தண்ணிள நீரும் தருக எனவும் பெற்றுண்பார். அவ்வாறு கண்கண்ட தெய்வமாகத் திருவிளையாடல் புரிந்த முருகன் ஒருநாள் கொடுத்த வேலை மறையச் செய்தருளினார்.

கண்ணிழந்தவன் போலக் கதிர்காமர் அடைந்த துயருக்கோர் அளவில்லை, வருந்தும் அடியானுக்குக் காட்சி கொடுத்து "இந்த ஒரு வேல் போனால் இன்னும் பல வேல்வர இருக்கிறது" என்றார். அம்மட்டில் பல வேல் பிரதிஷ்டைகள் தோன்றக் கண்டு திருவிளையாடல் புரியும் முருகையன் அருளில் ஒடுங்கி அவன் பாதபூசை புரிந்துருகுவார்.

ஆடி மாதத்தில் ஒரு வள்ளிக்கொடி முளைக்கக் கண்டு அன்றே கொடியேற்ற நாளாகக் கொண்டு மகோற்சவ விழா எடுத்து ஆவணிப் பூரணையில் செல்வ புஷ்கரணியில் தீர்த்த உற்சவம் கண்டு பக்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிகள் காவடி கரகம் எடுத்து முருகனுக்குக் காணிக்கையாக்கி அருட்பேறடைந்து வருகிறார்கள்.

கதிர்காமத்து ஏழுமலை ஐயன் தீர்த்தம் முடிந்து, நல்லூர்த் திருவிழா பூர்த்தியான ஆவணி அமாவாசைத் தீர்த்தத்தையடுத்து, செல்வச்சந்நிதி மகோற்சவம் நிகழும் மரபு பெருவழக்காக நிகழ்ந்து வருகிறது.

தீர்த்த விசேடம், தல விசேடமுள்ள இத்தலத்தில் திருநீறு தரிப் போர்க்கு நோய் நீக்கமுண்டாகும். தீர்த்தம், திருநீறு பிரசாதம், நூல் கட்டல் மகத்துவத்தால் வினை நீக்கம், நோய் நீக்கம் நினைத்த காரியம் முதலாய் சித்தியுண்டாகும் கண்டாமணி ஓசை கேட்டதும் பேய் பிடித்தவர்கள் அலறியும் ஆடியும், பாடியும் உருகுவார். தீபாராதனை கண்டதும் பித்துச் சேட்டையிழந்து அலறிக்கொண்டு பேய்கள் ஓட்டம் பிடிக்கும்.

## திருக்கோணமலையில் சைவ வளர்ச்சி

(சைவப்புலவர் - பண்டிதர். இ. வடிவேலு - திருகோணமலை)

இலங்கையிலுள்ள ஊர்ப் பெயர்களுக்கு முன்னால் 'திரு' என்ற சிறப்புச் சொல் சேர்ந்த ஊர்ப்பெயர்கள் மிகச்சிலவேயுள. திருமங்கலாய் என்பன அவற்றுட் சில. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பன ஸ்தலப் பெயர்கள். ஊர்பெயர்களல்ல. திருக்கோணமலையிலுள்ள சிவஸ்தலம் திருக்கோணேஸ்வரம். திருக்கோணமலையை நினைவுகூரும் போது கோணேசர் ஆலயம் மனக்கண்முன் வந்து தோன்றுகின்றது. திருகோணமலை தெட்சணகயிலாயம் என்று போற்றப்பட்டு வருகின்றது. உத்தர கயிலையிலுள்ள தெய்வீகம் திருக்கோணமலையிலும் இருப்பதால் அது தெட்சணகயிலாயம் என்றும் பேசப்படுகின்றது. ஸ்தலபுராணங்கள், இதிகாசங்கள், தேவாரங்கள், கோணேசர் கல்வெட்டு என்பன இதனை உறுதிப்படுத்துகின்றன.

மக்களின் லௌதீக வாழ்க்கையில் ஏற்பட்டுக் கொண்டுவரும் மாற்றங்களாலும், பிறநாட்டு நாகரிகங்கள் நமது நாட்டிலேற்படுத்தியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களாலும், பிறமதக்கோட்பாடுகள் மக்களுடைய உள்ளத்தில் புகுத்தப்பட்டதாலேற்பட்ட தாக்கங்களாலும் ஆதியாகிய சைவநெறி மக்களுடைய வாழ்க்கையிலிருந்து வழுவிச் சென்றுகொண்டிருப்பதாக நினைக்கலாம். மக்களின் புற வாழ்க்கையை அவதானித்து எடுக்கப்படும் இந்த முடிவில் உண்மையிருப்பதாகச் சொல்லமுடியாது. சமயநெறி மக்களின் அகவாழ்க்கையோடு தொடர்புபட்டது. சைவசமய தத்துவங்கள் வளர்ச்சியடைய வேண்டியவைகளல்ல. அவை பூரண வளர்ச்சியடைந்த சத்தியங்களாயுள்ளன. சைவசமய நெறியினைச் கடைப்பிடித்தொழுகும் திருகோணமலைச் சைவ மக்களின் சமய வளர்ச்சியை ஆராய்வதன் மூலம் திருக்கோணமலைச் சைவ வளர்ச்சியை அறியலாம்.

திருக்கோணேஸ்வரம் தெய்வீகம் நிறைந்த பாடல் பெற்ற சேக்ஷத்திரம். இயற்கையாகவே தெய்வ சான்னித்திஎம் பிரவாகித்துக் கொண்டிருக்குமிடம். சைவம் வளருவதற்கு விளம்பரம் வேண்டப்படாத இடம். அப்பேர்ப்பட்ட தலத்தை வழிபட்டு வந்த சைவசமயத்தவனாகிய இலங்கை மன்னன் இராவணனுடைய வரலாறு திருக்கோணமலையின் சைவ வளர்ச்சிக்கு விளக்கமும், விளம்பரமுமாயமைந்திருக்கின்றது.

சோழ பரம்பரையில் வந்த குளக்கோட்டு மன்னன் இற்றைக்கு 1700 வருடங்களுக்கு முன் திருக்கோணமலையில் கோணேசப்பெருமானுக்கு கோயிலெடுத்து திருப்பணி நிறைவேற்றினான். ஆலயத்தைப் பரிபாலனம் செய்வதற்காகக் குளக்கோட்டு மன்னன் பொருளாதாரத் திட்டமொன்றை வகுத்தான்.அதுவே கோணேசர் கல்வெட்டு எனப்படுவது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சிந்து நாடு, மருங்கூர், காரைக்கால் என்னும் இடங்களிலிருந்து குடிமக்களை அழைத்துவந்து, திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கட்டுக்குளப்பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பலகமப்பற்று என்னும் இடங்களிற் குடியமர்த்தினான். குடியேற்றப்பட்ட மக்கள் கோயிற் தொழும்புகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டவர்கள். கோயிற் தொழும்பாளர்கள் சிவநெறியாளர்களாயிருந்ததால் குளக்கோட்டு மன்னனுடைய காலந்தொடக்கம் திருக்கோணமலை மாவட்டம் சைவ வளர்ச்சியில் சிறப்புற்றோங்கியது.

திருக்கோணமலை மாவட்டம் வெருகல் தொடக்கம் தென்னமரவாடி வரையும் தம்பலகமம், கந்தளாய், பதவியாவை உள்ளடக்கிய பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசமாயிருந்தது. இங்கெல்லாம் அனேக சைவாலயங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கிராமங்களிலும் சைவாலயங்களிருக்கின்றன. திருக்கோணமலைப் பட்டணத்தில் மாத்திரம் முப்பத்தைந்து ஆலயங்களிருக்கின்றன.

கொட்டியாபுரப்பற்றில் மகாவலிகங்கைக் கரையோரமாகத் திருக்கரசையம்பதியெனச் சிறப்புற்று விளங்கிய ஸ்தலமிருந்தது. அங்குள்ள திருமங்கலாய், அகஸ்தியர் ஸ்தாபனம், சங்குவேலி என்னுமிடங்களில் மாபெரும் சிவாலயங்களிலிருந்து இன்று அழிந்து கிடக்கின்றன. கந்தளாயில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட சிவன் கோயிலும், பெரியகுளம் நாதனார் கோயிலும், தென்னமவாடி சிவன் கோயில் என்பனவும் சிதைந்து கிடக்கின்ற போதிலும், திருக்கோணமலை மாவட்டத்தின் சைவ வளர்ச்சியை அவைகள் பெருமிதத்தோடு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. ஈழநாட்டின வரலாற்றைக் கூற முற்படும் போது, திருக்கோணமலை மாவட்டம் தமிழ் மக்களின் குடியிருப்பாகவும், சைவ சமயம் வளர்ந்தோங்கிய பிரதேசமாகவும் இருந்ததென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தராலும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் அருணகிரிநாத சுவாமிகளாலும் பாடப்பெற்ற திருக்கோணேஸ்வரத்திலுள்ள கோணேசர் ஆலயத்தைப் பதினேழாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் இடித்தழித்தனர். இதனால் திருக்கோணமலைச் சைவமக்கள் சமய வளர்ச்சியில் பின்தங்கிவிடவில்லை. கோணேசப் பெருமான் திருக்கோணமலைத் தேவாரத் திருப்பதிகத்தில் அமர்ந்திருந்தார். சைவநெறி மக்களுடைய உள்ளத்திலே வளர்ந்தது. இதன் பிரதிபலனாகத் திருக்கோணமலைப் பட்டணத்திலும், கிராமங்களிலும் மக்கள் ஆலயங்கள் அமைத்துச் சைவம் வளர்த்தார்கள். இன்று திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பழைய ஆலயங்களின் இடிபாடுகளும், புதிய ஆலயங்களும், திருக்கோணேசர் ஆலயமும், திருகோணமலைச் சைவ மக்களின் சமய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஆலயங்களுக்குப் பாடியருளிய திருக்கோணாசலபுராணம், தெட்சணகயிலாய புராணம், திருக்கோணமலை யந்தாதி, திருக்கசைப் புராணம் என்பவைகளும், தேவாரம், திருப்புகழ் என்பனவும், சிந்து, ஊஞ்சல், சதகம் முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பாடல்களும், வெருகல், கல்வெட்டு, கங்குவேலிக் கல்வெட்டு, பெரியகுளம் கல்வெட்டு, கந்தளாய்க் கல்வெட்டு, குச்சவெளிக்கல்வெட்டு, திரியாய்க் கல்வெட்டு, பழமோட்டைக் கல்வெட்டு, கோட்டைவாசற் கல்வெட்டுஎன்பனவும், திருகோணமலையின் சைவ வளர்ச்சியையும், பரம்பலையும் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் வேறெங்கேயும் நடைபெறாத "கும்ப்விழா" திருக்கோணமலையில் சிறப்புவிழாவாக நவராத்திரியின் கடைசி நாளில் நடைபெற்றுவருகின்றது. இங்குள்ள எல்லாஆலயங்களிலிருந்தும் கும்பம், கரகம் என்பனவற்றை அடியார்கள் தாங்கிக்கொண்டு பக்திப்பரவசத்தோடு புறப்பட்டு வீதிகள் தோறும் சென்று ஒவ்வொரு ஆலயங்களையும் தரிசித்து வருவார்கள். மக்கள் சைவாசார முறைப்படி வீடுகள் தோறும் நிறைகுடம் வைத்து வரவேற்று வழிபடுவார்கள். இது திருக்கோணமலைக்கே உரியசைவப் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது. கோணேசப் பெருமான் சிவராத்திரிக்கு அடுத்துவரும் மூன்று நாட்களுக்கு நகர்வலம் வருகின்ற பெருவிழாவும் திருக்கோணமலைச சைவ வளர்ச்சியின் எழுச்சிவிழாவாக நடைபெற்று வருகின்றது. இது போன்ற நெடுவிழா இந்தியாவிலுங்கூட நடைபெறுவதில்லையென அறிகின்றோம். சல்லியம்மன் கோயிலிலும், பாலம்போட்டாற்றுப்பத்தினியம்மன் கோயிலிலும் வருடமொருநாள் நடைபெறும் பொங்கல் விழாவும். ஸ்ரீ பத்திர காளியம்பாள் கோயிலில் நடைபெறும் வைகாசிப் பொங்கல் விழாவும், கௌரிநோன்பும், திருக்கோணேசர் ஆலயத்திலும், கன்னியாய் நடேசர் ஆலயத்திலும் நடைபெறும் சிவராத்திரி விழாக்களும் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் உறியடி விழாவும், அகஸ்தியர் ஸ்தாபனம், கங்கைத்துறை என்னுமிடங்களில் நடைபெறும் ஆடியமாவாசைத் தீர்த்தவிழாவும், திருக்கோணமலைச் சைவ வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்து வருகின்றன. சைவாலயங்கள் நிறைந்த திருகோணமலையில் வருடத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் எங்காவது ஓராலயத்தில் உற்சவம் நடந்துகொண்டிருப்பதால் திருக்கோணமலை மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் சைவநெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்து வருகிறார்கள். இதனால் வீடுதோறும் சைவம் வளர்ந்துகொண்டிருகின்றது.

ஆலயங்களை அமைத்துச் சைவத்தை வளர்த்த திருக்கோணமலை மக்கள் சமய ஸ்தாபனங்களாலும் சைவத்தை வளர்த்துக் கொண்டிருக் கிறார்கள். இந்து இளைஞர் மன்றம், இந்து மாமன்றம், சிவயோக சமாஜம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி மன்றம், தெய்வநெறிக் கழகம், சைவ மங்கையர் மன்றம், இவை போன்ற பல சங்கங்கள் அரும்பெரும் சிவப்பணிகளையாற்றிச் சைவத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. கல்வி நிலையங்களும் சைவ சமயவளர்ச்சியில் மாபெரும் பங்கெடுத்து வருகின்றது. சைவச்சான்றோர் களும், சமயத்தொண்டர்களும் சைவத்தை வளர்த்துக் கொண்டிருக் கிறார்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# பெரிய புராணத்தில் சிவ வழிபாடு

சிவ. சண்முகவடிவேல்

சிவபெருமானுக்குச் சாத்தும் பூக்களைச் சிவகாமியாண்டார் தேர்ந்து பறித்தார். பறித்த பூக்களால் பூங்கூடையை நிறைத்தார். நிறைந்த கூடையைக் கையில் தாங்கிக் கொண்டார். நெஞ்சினில் மேலான அன்பையும் தாங்கிக் கொண்டார். தண்டையும் தாங்கிக் கொண்டார். அருட்கண்ணராகிய சிவபிரானுக்கு அமைத்துச் சாத்தும் நேரத்தில் கொடுக்க வேண்டும். சிவகாமியாண்டார் அரனார் ஆநிலை ஆலயத்தை அடைய விரைந்து வந்தார். சிவனடியார்கள் அரன் பணியில் அனுப் பொழுதும் அகலாதவர்கள். அதனால் சிவகாமியார் 'கடிதினில் வாரா நின்றார்' என்பார்.

அவ்வுண்மையைச் சேக்கிழார் வாக்குச் சித்திரித்துக் காட்டும் செம்மை ஆகும்.

**கோலம்பூங் கூடை தன்னை**
**நிறைத்தனர் கொண்டு நெஞ்சில்**
**வாலிய நேசங் கொண்டு**
**மலர்க்கையிற் றண்டுங் கொண்டங்**
**காலய மதனை நோக்கி**
**யங்கணர்க் கமைத்துச் சாத்துங்**
**காலைவந் துதவ வேண்டிக்**
**கடிதினில் வாரா நின்றார்.**

**(எறி - நாயனார் - 10)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாகக் காலையில் நித்திரை விட்டு எழுந்த பின்பு முதற் புரியும் தெய்வக் கடமைப் பணியைச் சிரமேற்கொண்டார்கள் நாயன்மார்கள். அவற்றுள் ஒரு சிலவற்றை எடுத்துக் காட்டாக அறியக் காட்டுகின்றோம்.

திருமுருகநாயனார் திருப்பூம்புகலூரைச் சேர்ந்தவர். நாயனார் நாகம் புனைவார் சேவடிக்கீழ் ஊனம் இன்றி நிறைந்த அன்பால் உருகும் மனத்தை உடையவர்.

நாள்தோறும் பொழுது புலர்வதன் முன்பு துயில் எழுவார். தூய நீரில் மூழ்குவார். பெருமானுடைய திருமுடிமேல் சாத்துவதற்குரிய நன்மலர்களை மணம் கமழும்படி அலரும் சமயம் பறித்து எடுப்பார். அளவில்லாத விதம் விதமான பூக்களை வெவ்வேறான பூங்கூடைகளில் சேகரிப்பார்.

**புலரும் பொழுதின் முன்னெழுந்து**
**புனித நீரின் மூழ்கிப்போர்**
**மலரும் செவ்வித் தம்பெருமான்**
**முடிமேல் வானி ராறுமதி**
**உலவு மருங்கு முருகுயிர்க்க**
**நகைக்கும் பதத்தி னுடன்பறித்த**
**அலகின் மலர்கள் வெவ்வேறு**
**திருப்பூங் கூடை களிலமைப்பார்.**

திருமுருகனார் கொம்பில் மலருகிற மலர்கள், நீரில் மலருகின்ற மலர்கள், கொடிகளில் மலரும் மலர்கள் ஆனவற்றை எல்லாம் அரனார்க்குச் சாத்தும் அன்போடு பறிப்பார். அம்மலர்களை அண்ணலார் திருமுடியில் சாத்தும் தகுதியில் தேர்ந்து எடுப்பார்.

**கோட்டு மலரு நிலமலருங்**
**குளிர்நீர் மலருங் கொழுங்கொடியின்**
**தோட்டு மலரு மாமலருஞ்**
**சுருதி மலருந் திருவாயிற்**
**காட்டு முறுவ னிலவலரக்**
**கனக வரையிற் பன்னநாண்**
**பூட்டு மொருவர் திருமுடிமேற்**
**புனைய லாகு மலர்தெரிந்து**

முருக நாயனார் அம்மலர்களை எல்லாம் திருக்கோயிலுக்கு எடுத்து வருவார். ஒரு தனியான இடத்தில் மலர்களை வைத்துத் தாமும் அமர்வார். நூலிலே கோர்க்கும் கோவை மாலைகளும் இண்டை மாலைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கு மாலைகளும் தாம மாலைகளும் இணைக்கும் மாலைகளும் தண்டில் கட்டும் கண்ணிமாலைகளும் பாதங்களில் சாத்தும் பிணையல் என்னும் மாலைகளும் திருத்தொங்கல் மாலைகளையும் அந்தணராகிய முருகநாயனார் பந்தம் அறப்பரிவோடு சிந்தித்து அமைப்பார்.

**கொண்டு வந்து தனியிடத்தி**
**லிருந்து கோக்குங் கோவைகளும்**
**இண்டைச் சுருக்குந் தாமமுட**
**னிணைக்கும் வாச மாலைகளும்**
**தண்டிற் கட்டுங் கண்ணிகளும்**
**தாளிற் பிணைக்கும் பிணையல்களும்**
**நுண்டா திறைக்குள் தொங்கல்களுஞ்**
**சமைத்து நுடங்கு நூன்மார்பர்.**

இறைவனுடைய திருமேனியில் அந்த அந்தக் காலங்களுக்குப் பொருத்தமான மாலைகளைச் சாத்துதல் உத்தமம் என்னும் உண்மையை முருகநாயனார் முறையாக உணர்ந்தவர். காலங்களுக்குப் பொருத்தமாகச் சமைத்த மாலைகளை கைகளிற்றாங்கிச் செல்வார். முப்புரம் எரி செய்த அப்பருடைய திரு அங்கங்களில் சேரச் சாத்துவார். அத்தோடு அமையாது நற்றவருடைய நாம அஞ்செழுத்தையும் நாவில் நவிலும் நல்லோர்.

**ஆங்கப் பணிக ளானவற்றுக்**
**கமைத்த காலங் களினமைத்துத்**
**தாங்கிக் கொடுசென் றன்பினொடுஞ்**
**சாத்தி வாய்ந்த வர்ச்சனைகள்**
**பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார்**
**பரமர் பதிகப் பற்றான**
**ஓங்கிச் சிறந்த வஞ்செழுத்து**
**மோவா நாவி னுணர்வினார்.**

முருகநாயனார் இந்த அரிய திருப்பணி செய்யும் பேற்றினால் அகிலம் ஈன்றளித்த அம்மை திருமுலைப்பால் உடனுண்ட பிள்ளையாருக்கு நண்பருமாகும் பெருமை உடையாராயினார். அத்தோடு புகலிப் பிள்ளையாருடைய பொங்கு திருமணத்தில் புக்கு அருளினார். சிவபெருமான் திருவருள் அளிக்கப்பெற்றமையால் பெருமானுடைய திருவடி நீழலில் தலையாய நிலைமை பெற்றருளினார்.

**வளரும்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோக சுவாமிகள்

- கி. துரைராசசிங்கம் -

எமது மதம் சைவம். இது என்று தோன்றியது என்று கூற முடியாவிட்டாலும் இன்றுவரை தன் நிலையிற் குறைவுறாது செழித்தும் கிளைத்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறப்பு இதற்குண்டு. இதற்குக் காரணம் காலந்தோறும் தோன்றி காலத்துக்கேற்ற மலர்ச்சியுடன் அதனை வாழ்வித்த மெய்ஞ்ஞானிகளின் தொண்டே என்பது வெளிப்படை, இதற்கு மெய்ஞ்ஞானிகளுள் ஒருவரே அண்மைக்காலம் வரை நம் மத்தியில் வாழ்ந்து நமது மதத்துக்குப் பெரிதும் தொண்டாற்றி ஞானப் பேறு பெற்ற சிவயோக சுவாமிகள் ஆவர்.

யோக சுவாமிகள் 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதிக்குச் சமமான ஆங்கீரச ஆண்டு வைகாசி மாதம் 18 ஆம் திகதி அவிட்ட நட்சத்திரம்கூடிய அதிகாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணத்து மாவிட்டபுரத்தில் திருவவதாரஞ் செய்தார். இவரது தந்தை அம்பலவாணர். தாய் சின்னாச்சியம்மை. இவரின் பிள்ளைத்திருநாமம் சதாசிவன் என்று சொல்லப்படுகின்றது. சதாசிவனார் மாவிட்டபுரத்திற் பிறந்த போதும், தந்தையாரின் ஊரான கொழும்புத்துறையிலேயே தமது ஆரம்பக்கல்வியைப் பயின்றார். இவரது எட்டாம் வயதளவில் இவரை ஈன்றளித்த அன்னையார் பரமபதமெய்தினார்.

சதாசிவனாரின் தந்தையார் ஒரு வியாபாரி. இவர் மலையகத்திலுள்ள மஸ்கெலியா என்னுமிடத்தில் தனது வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்தார். இதனால் இவரது தமக்கையாரான முத்துப்பிள்ளை என்னும் அம்மாளே சதாசிவனாரை வளர்த்து வந்தார். சதாசிவனார் நான்காம் வகுப்பில் கற்றுக்கொண்டிருக்கையில் இவரின் தந்தையாரும் இவ்வுலக வாழ்வை நீத்தார். பெற்றோரை இழந்த சதாசிவனாரின் ஆற்றல் பற்றி இவரது சிறிய தந்தையாரான சின்னையா அறிந்து வைத்திருந்தார். எனவே இவரை யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் பாடசாலையிற் சேர்த்து ஆங்கிலக்கல்வி பயிலச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய தந்தையாரின் உதவி தொடர்ந்து கிடைக்காமையாலோ என்னவோ சதாசிவனார் ஏழாம் வகுப்புப் பயின்றதுடன் தமதுபடிப்பை நிறுத்திக்கொண்டார். இளைஞரான சதாசிவனாருக்கு தான் தொடர்ந்தும் தமது மாமியரான, வளர்ப்புத்தாய், முத்துப்பிள்ளைக்குப் பாரமாயிருப்பது மனதுக்குப் பிடிக்கவில்லை. எனவே ஏதேனும் தொழிலொன்றைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். இதன் காரணமாக கிளிநொச்சியில் அமைந்துள்ள இரணைமடுக் குளத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 'பொருட்காப்பாளர்' என்னும் பதவி இவருக்குக் கிடைத்தது.

தொழிலொன்று கிடைத்தமை காரணமாக, கடமை நேரம் போக எஞ்சிய நேரத்தில் நல்ல ஓய்வு கிடைத்தது. இதன் காரணமாக அவருள்ளே உறங்கிக்கிடந்த சமய நாட்டம் மெல்ல விழித்துக் கொண்டது. எனவே சைவ சமயம் பற்றிய பல நூல்களையும் தோத்திரங்களையும் அடியார்தம் வரலாறுகளையும் நேரம் கிடைத்தபோதெல்லாம் படிக்கத்தவறினாரில்லை. பழவினைப் பயன் காரணமாக, எம்மனோரைப் போல் நூல்களை வெறுமனே வாசித்துக் கொண்டிராது, அவற்றின் உண்மைப்பொருளை உணர்ந்து படிக்கும் ஆற்றல் அவருக்குக் கை வரப் பெற்றது. இதன் காரணமாக தோத்திரங்களைப் படிக்கும் போதெல்லாம் இவர் மெய்மறந்து தியானத்தில் ஆழ்ந்து விடுவார்.

தியானம் என்பது தன்னையே மறந்து தன்னைப் படைத்த பரம்பொருளிற் கலந்து நிற்கின்ற ஒரு மோன நிலையாகும் கண்மூடிக்கொண்டிருப்போருக்கேல்லாம் இந்நிலை கைவரப் பெறாது, இது மெய்யுணர்வு பெற்ற ஞானிகளால் மட்டுமே அமையக்கூடிய ஒரு பேரின்ப நிலையாகும். உலக மாயையிலே வீழ்ந்து ஆசைகட்கு அடிமைப்பட தம்மையறியாமலே துன்பத்தில் வீழ்ந்து வருகின்ற வாலிபப் பருவத்திலே, இப்பேரின்ப நிலையை எய்துதவென்பது ஞானியரால் மட்டுமே இயலக்கூடிய தொன்றாகும்

பொருட்காப்பாளராகப் பணிபுரிந்த சதாசிவனார் இவ்வாறு அடிக்கடி மோன நிலையை அடைந்து, யோகிகள் போலக் காணப்படுகின்றார் என்பது அவரோடு வேலை செய்த பலருக்குத் தெரியும். இதனால் அவரை 'யோகா' என அழைக்கத் தொடங்கினார்கள். 'எல்லோரும் உறங்குகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது ஞானி விழித்திருப்பான்' என்பதற்கிணங்க அனைவரும் உறங்கச் சென்றதன் பின் யோகர் தோத்திரப்பாடல்களைப் பாடித்தியானத்தில் ஆழ்ந்து விடுவார். இச்செய்தியை அறிந்த தலைமைப் பொறியியலாளரான பிறவுணி (Brown) என்பார் யோகரை 'கடவுள் மனிதன்' (God Man) என்று அழைக்கத்தொடங்கினார்.

யோகருக்கு ஞானம் கைவரக் கைவர உத்தியோகத்தின் பால் இருந்த நாட்டம் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. இதனால் உத்தியோகத்தைத்துறந்துவிட்டு ஊருக்குத்திரும்பிவிட்டார். இவர கொழும்புத்துறையில் வாழ்ந்த காலத்தில் செல்லப்பா என்னும் ஒரு சுவாமியார் நல்லூரில் இருக்கின்றார் என்பதைப்பற்றி அறிந்திருந்தா

மக்கள் அவரை 'விசர்ச்செல்லப்பா' என அழைப்பது வழக்கம். யோகர் பலமுறை இவரைக் கண்டுள்ளார். அப்போதெல்லாம் மற்றைய வர்களைப் போற்றான் இவரும் என நினைத்துக்கொண்டிருந்தார். ஆனால் ஞான நாட்டத்தின் காரணமாக உத்தியோகத்தைத் துறந்து விட்டு வந்ததன் பின் யோகரின் எண்ணங்கள் செல்லப்பா பால் ஈர்க்கப்பட்டன. உண்மையிலேயே அவர் விசரனல்லர், அவர் ஒரு ஞானப்பழம், 'நிர்வாண உலகில் கோவணம் கட்டுபவன் பழிப்புக்கிடமாதல் போல, இவரையும் மக்கள் பழிக்கின்றனர் என யோகர் உணர்ந்து கொண்டார்.

அன்றொரு நாள்... யோகரின் உள்ளத்தில் ஏதோவொரு உள்ளுணர்வு உந்தத் தொடங்கியது. நல்லூரை நோக்கி நடந்தார். அவரது கால்கள் அவரையறியாமலே வேகங்கொண்டன. கண்கள் எதையோ ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. நல்லூர்த்தேரடி ..... அங்கே அந்த உருவம். பலரால் விசரனென்று சொல்லப்பட்டபோதும் 'செல்லப்பா சுவாமிகள்' என்று அடிக்கடி சொல்லப்படுகின்ற அந்த ஞானப்பழம்.. மோன நிலையிலே உள்ளும் புறமும் அசைவின்றி கற்சிலை போல் வெகு கச்சிதமாக. அங்கே அமர்ந்திருக்கின்றது. கடும்பசி கொண்ட கன்றுக்குட்டியைப் போல யோகர் அந்த இடத்தையணுகி தலை குனிந்தபடி நிற்கின்றார். சொல்லி வைத்தாற் போல் செல்லப்பா சுவாமிகளின் கண்கள் திறக்கின்றன. அவர் தனது வலக்கரத்தைத் தூக்கி தாழ்ந்து நிற்கும் அந்த இளைஞனின் தலைகளில் வைக்கிறார். ஒரு நொடிப்பொழுது ஓடி மறைந்தது.. "நீ யாரடா? உன்னுள்ளே யாரடா! வினை தீர்டா 'பிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடடா! என்ற வார்த்தைகள் கணீர்... எனத்தெறிக்கின்றன. திடீரென எழுந்த செல்லப்பா சுவாமிகள் விறுவிறென நடக்கின்றார். யோகர் சிலையாக நின்றவர், வீட்டுக்குத் திரும்பிவிட்டார்.

அன்றிலிருந்து யோகர் செல்லப்பா சுவாமிகள் அடிச் சுவடுகளையே பின்பற்றித் திரிந்தார். இருவரும் குருவும் சீடனுமாயினர் அடிக்கடி மிகச் சிறந்த தத்துவ விளக்கங்கள் யோகருக்குக் கிடைக்கும். இருவரும் நாட்கணக்காக நல்லூர்த்தேரடியில் விழித்தநிலையிற் சமாதியாகி விடுவர். வெறுமனே பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாகவும், ஞான நாட்டம் கொண்டவர்கட்கு வெகு அற்புதமாகவும் இருக்கும் அந்தக் காட்சி சில நாட்களின் பின் செல்லப்பா சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க யோகர் கொழும்புத்துறைச் சந்தியில் அமைந்துள்ள இலுப்பை மரத்தடியைத் தனது உறைவிடமாக்கிக் கொண்டார்.

யோகரைப் போல செல்லப்பா சுவாமிகட்கு கதிரவேலு என்னும் இன்னொரு சீடரும் இருந்தார். ஒரு நாள் யோகரும், கதிரவேலரும் நல்லூர்த்தேரடியில் தியானத்தில் அமர்ந்து கொண்டனர். நாற்பது நாட்கள் அவர்களது தியானம் தொடர்ந்தது இடையிடையே செல்லப்பா சுவாமிகள் அவ்விடம் வந்து சீடர்களை அவதானித்து விட்டுச் செல்வார். நாற்பதாவது நாள் அவ்விடம் வந்த செல்லப்பா சுவாமிகள் ‘இரண்டு யானைகளை ஒரு தறியிற் கட்ட முடியாது’ என்று கூறிய படியே இருவரையும் எழுப்பி எங்காவது போய் வாருங்கள் என்று துரத்தி விட்டார். இருவரும் கிழக்கு நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

சென்றவர்கள், சென்றவர்கள் தான், பல நாட்களாகத் திரும்பிவரவேயில்லை. யோகரின் உறவினர்கள் செல்லப்பா சுவாமிகளிடம் யோகரைப்பற்றி வினாவியபோது ‘அவன் செத்துவிட்டான;’ என்று சொல்லிவிட்டான். நீண்ட நாட்களாக யோகரைக் காணாத சுற்றத்தினர் யோகர் இறந்துவிட்டதற்கான கிரியைகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டனர்.

இவ்வாறெல்லாம் யாழ்ப்பாணத்தில நடக்க, சீடர்கள் இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து கால் போன போக்கில நடக்கத் தொடங்கினார்கள். யோகா வழியிற் கிடைத்ததை உண்டும், நித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த இடத்தில் படுத்தும், நடந்தும் கதிர்காமத்தை அடைந்து அங்கிருந்து கொழும்பு வழியாகத் திரும்பி, மலைநாட்டுக்குச் சென்று, இறுதியாக நல்லூரை அடைந்தார். இதையறிந்த யோகரின் உறவினர்கள் செல்லப்பா சுவாமிகளை அணுகி 'யோகர் இறந்ததாகக் கூறிவிட்டீர்களே' என்ற போது 'உண்மையிலே அவன் செத்துவிட்டான்' என்று அவர் குறிப்பிட்டார், அவர் கூறியதன் உட்பொருளை அறியாத அவர்கள் 'அவர் விசரர்தானே' என்று எண்ணிக் கொண்டே அவ்விடத்தை விட்டகன்றனர்.

தமது முப்பத்துநான்காம் வயதில் மேற்கூறப்பட்ட படி யாத்திரை புறப்பட்ட யோகர் நான்கு ஆண்டுகளின் பின்புதான் மீண்டும் யாழ்ப்பாணத்தை அடைந்தார். ஆனால் கதிரவேலுவுக்கு யாது நிகழ்ந்ததோ தெரியாது. அவர் போனவர் போனவர்தான். எங்கு சென்றார் என்னவாநார் என்பதுபற்றி யாருக்குமே தெரியாது.

யோகர் சென்றது, மீண்டும் வந்தது, அவரது நடவடிக்கைகளில் காணப்பட்ட மாற்றம் இவற்றையெல்லாம் கண்ணுற்ற மக்கள் யோகரை யோக சுவாமிகள் என்று அழைக்கத் தொடங்கினார்கள். இக்காலத்திற்றான் யோக சுவாமிகளின் குருநாதர் செல்லப்பா சுவாமிகள் சிவபதமடைந்தார். இதன் பின் யோக சுவாமிகள் கொழும்புத்துறையிலே இலுப்பை மரமொன்றின் கீழ் அமர்ந்துகொண்டு தன்னை நாடி வந்தவர்கட்கெல்லாம் பல விதங்களில் அருள் செய்யத் தொடங்கினார். பலரது நோய்கள், வறுமை, துன்பம் என்பன யோக சுவாமிகளின் அருட்கடாட்சத்தால் நீங்கிப்போயின.

இதன் பின்னர் யோக சுவாமிகளை நோக்கி அன்பர்கள் படையெடுத்தவண்ணமிருந்தனர். இலுப்பை மரத்துக்கு அணித்தாக, கடையொன்றை நடத்தியவர்கள் நாளடைவில் அதனைக் கைவிட்டுச் சென்றுவிட்டனர். மழை வெயிலெனப் பாராது இலுப்பை மரத்தின் கீழிருந்த யோகர் சுவாமிகளைக் கண்ணுற்ற, கடை அமைத்திருந்த காணிசொந்தக்காரரினதும் அன்பர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க, யோகசுவாமிகள் அந்தக் கடைக் கொட்டிலிற் குடியேறினார். அங்கு தேவார பாராயணமும் சமயம் சம்பந்தமான உரையாடல்களும் நாளும் பொழுதும் நடைபெற்றவண்ணம் இருந்தன. திருப்பெருந்துறை குருந்தமர நிழலில் எம்பெருமான் குருவடிவம் கொண்டு தேவகணங்களான சீடர்கட்கு அருளுபதேசம் செய்துகொண்டிருந்ததைப் போன்றிருக்கும், அந்தக் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகதகவென்று வெள்ளிக் கம்பிகள் போல் விளங்கி ஒளிர்கின்ற வெண்தாடி.... பஞ்சு பொதிந்தால் போன்ற வேட்டி அதன் மேற்போர்த்துக்கொள்கின்ற சால்வை. கட்டையான, கெட்டியான, வக்கிரம் போன்ற தேகம். இத்தனையும் இலங்கையில் மட்டுமின்றி உலகில் பல பாகங்களிலுருந்தும் பல அன்பர்களையும் அடியவர்களையும் யாழ்ப்பாணத்தை நோக்கி கவர்ந்திழுக்கும் காந்தமாயிற்று.

'சமயம் என்பது சொல்லி விளங்கவைக்க வொண்ணாதது' என்பது யோக சுவாமிகளின் கொள்கை. இருப்பினும் மக்கள் மத்தியிலே சமய உணர்வை மெல்ல மெல்லத் தூண்டுவதன் மூலம் அவர்களை விழிப்படையச் செய்யலாமென்பது அவரது நம்பிக்கை. இதன் காரணமாகத்தான் அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு சமய சஞ்சிகையை ஏற்படுத்த சுவாமிகள் இணங்கினார். சுவாமிகளின் நல்லாசிகளுடன் 'சிவதொண்டன்' என்னும் தமிழ் ஆங்கில வெளியீடான சமய சஞ்சிகை 1935 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் இன்றுவரை மாத வெளியீடாக வெளிவந்து ஞான ஒளி பரப்பிக் கொண்டிருக்கின்றது.

இச்சஞ்சிகையின் மூலம் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் பல, பாமர மக்கள் தெளிவுறக்கூடிய விதத்தில் மிக எளிமையாக விளக்கப்படுகின்றன. சுவாமிகளால் அவ்வப்போது சொல்லப்பட்டவையும், எழுதப்பட்டவையுமான பாடல்களாயும், உரையாயும் அமைந்த நற்சிந்தனைகள், ஒவ்வொரு சிவதொண்டனிலும் தவறாது இடம்பெறும் சுவாமிகளின் அடியவர்கள் இச்சிறந்த தொண்டினை 'சிவ தொண்டாகவே' கருதிச் செய்து கொண்டிருக்கின்றனர். சிவ தொண்டன் வெளிவரத் தொடங்கியதும் யோகசுவாமிகளின் புகழ் உலகின் எல்லாத் திக்குகளிலும் பரவத் தொடங்கியது. அன்பர்கள் பலர் சுவாமிகளின் அடியவர்கள் ஆனார்கள். சுவாமிகளின் போதனைப்படி தேவார பாராயணம், புராண படனம், தியானம் என்பன செய்ய ஒரு பொது இடம் வேண்டும் என்ற எண்ணம் அன்பர்கள் மத்தியில் உருக்கொண்டது. சுவாமிகள் இக்கருத்தை ஏற்றுக்கொள்வாரோ இல்லையோ என்ற ஏக்கத்துடன் இது பற்றி சுவாமிகளுடன் பேசினர்.

காலத்துக்கேற்ப சமயத்துக்கு புத்துயிர்ப்பு ஊட்ட வேண்டும் என்பதை உணர்ந்த சுவாமிகள், ஆரம்பத்தில் அன்பர்களின் கூற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளாத போதும், இறுதியில் சம்மதம் தந்தார். இதன் காரணமாக 4.11.1953 இல் காங்கேசன்துறை வீதியில் யாழ் இந்துக் கல்லூரிக்கு அணித்தாக ' சிவதொண்டன் நிலையம் என்னும் பெயரில் ஒரு ஆச்சிரமம் அமைக்கப்பட்டது. இந்த நிலையத்தின் கிளை நிலையமொன்று நாளடைவில் மட்டக்களப்பில் செங்கலடி என்னுமிடத்தில் அமைக்கப்பட்டு கிழக்கிலங்கை மக்களுக்கு ஞான ஒளி ஊட்டிக்கொண்டிருக்கிறது. சிவதொண்டன் நிலையங்கள் வட மாகாண மக்களுக்கும், கிழக்கு மாகாண மக்களுக்கும், தம்மிடையே வேற்றுமையின்றிக் கலந்து பழகுவதற்கான இணைப்புப் பாலங்களாக அமைய வேண்டுமென்பது சுவாமிகளின் அவாவாகும்.

சிவதொண்டன் நிலையம் புராண மண்டபம், தியான மண்டபம் என்னும் இரு பிரதான மண்டபங்களைக் கொண்டது. புராண மண்டபத்தில் யோக சுவாமிகளினதும், தேவார முதலிகளினதும், முருகன், சிவன், விநாயகர் போன்ற மூர்த்திகளினதும் திருவுருவப் படங்கள் வைக்கப் பட்டுள்ளன. இங்கு புராண படனம், சித்தாந்த வகுப்பு, பண்ணிசை வகுப்பு, தேவார பாராயணம் என்பன நடைபெறும். தியான மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள பீடமொன்றில் 'திருவடி' வைக்கப்பட்டுள்ளது. இங்கு அன்பர்கள் தியானம் செய்வார்கள். ஒவ்வொரு நாளும் காலை, மாலை இரு வேளைகளிலும் பூசை நடைபெறும். பூசை மௌன பூசையாகவே இருக்கும். மாலையில் பூசை நடைபெறுவதைத் தொடர்ந்து தோத்திரப் பாடல்கள் பாடப்படும். இதனை விட சிவராத்திரி, திருவடி பூசை, குரு பூசை, திருவாதிரை, யாகம், ஆச்சிரம வாழ்வு என்னும் விசேட பூசைகளும் அவ்வவ் நாட்களில் நடைபெறும்

சிவதொண்டன் நிலையங்கள், 'சிவதொண்டன் சபை' எனப்படும் சபையினால் நிர்வகிக்கப்படுகின்றன. இச்சபையினர் யோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களையும், உரைகளையும் தொகுத்து 'நற்சிந்தனை' என்னும் நூலொன்றை வெளியிட்டுள்ளனர். இதன் முதற் பதிப்பு 1959ம் ஆண்டில் வெளிவந்தது. இதுவரை மூன்று பதிப்புக்களாக இந்நூல் வெளிவந்துள்ளது. தற்காலத்தவர்க்கேற்ற இலகு தமிழில் வேதாந்த, சித்தாந்த, சாத்திர, தோத்திரக் கருத்துக்களைப் பிழிந்து சுருக்கமாகவும், தெளிவாகவும் அவ்வப்போது தமது அன்பர்கட்கும் அடியார்கட்கும் வாழ்க்கைச் சாதனைகளாகவும், போதனைகளாகவும் கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களினதும், உரைநடைகளினதும் தொகுப்பாக இந்நற்சிந்தனை அமைந்துள்ளது.

இவ்வாறெல்லாம் பெருந் தொண்டாற்றி அத்தொண்டின் சின்னங்களாக மேற்குறித்த நூல்கள் நிலையம் என்பவற்றோடு தமது அன்பர்களையும், அடியார்களையும் தம்பணியைத் தொடர்ந்து ஆற்றும்படி நிறுத்தி விட்டு எமக்கெல்லாம் ஞான ஒளியூட்டிக் கொண்டு நின்ற அந்தச் சுடர் விளக்கு 23-4-1964 அன்று ஆயிலிய நட்சத்திரம் கூடிநின்றதும், இவ்வுலகிற் தாம் அவதாரம் செய்றதுமான அதிகாலை 3.30 மணிக்கு தன் ஒளிக் கதிர்களை விட்டு விட்டு தன் பரம் பொருட் சோதியுட் கலந்து விட்டது.

## யோக சுவாமிகளின் உபதேசங்களிற் சில

'ஒரு பொல்லாப்புமில்லை'

'முழுது முண்மை'

'எப்பவோ முடிந்த காரியம்'

'யாம் அறியோம்'

'அலைகின்ற எனதை அடக்க தேவாரம் படிப்பது ஒரு வழி

'கை விரல்களைப்போற் தனியேயிருக்க வேண்டும், தேவையானபோது கூடிக் கொள்ள வேண்டும்.'

'சிமினி புகைபிடித்தால் வெளியே ஒளி தெரியாது. இதே போன்றதே அன்மாவும் மாயையும்'

'தாழ்ந்த இடத்தைத் தண்ணீர் அடைவது போல எப்போதும் கீழ்ப்படிவாயிருங்கள்,'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வரலாற்றில் இணுவிலின் பங்கு

- கா.செ.நடராசா - பி.ஏ (சிறப்பு) எம்.ஏ.கியூ -

இணுவில் என்ற ஊரின் வாழ்வினை அதன் பண்பாட்டினை ஆராயும் பொழுது, இக்கால வரலாற்றாசிரியரின் கருத்தின்படி கி.பி. 13ம் நூற்றாண்டில் இருந்தே தொடங்க வேண்டியுள்ளது. அதாவது யாழ்ப்பாண அரசு தோன்றிய பின் தான் இணுவிலின் வரலாறு தோன்றியது எனக் கருதுவர். அதற்கு முன் அது தனக்கென ஓர் தனிவரலாறு உடையதாக இருக்கவில்லை என்பர். அதன் வரலாறு யாழ்ப்பாணத்துடனும் ஈழத்துடனும் பின்னிப் பிணைந்துள்ளது.

யாழ்பாடி வடமாநிலத்தினைப் பரிசிலாகப் பெறுமுன் மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் அதனை மணிபல்லவம் எனக் குறிப்பிடுவர். தென் இந்திய நிலப்பரப்பில் இருந்து ஈழநாடு கடல் கோளால் பிரிக்கப்படு முன்னர் இந்நாட்டில் நாகர்குல மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. இதற்கு மரபுவழிச் செய்திகளும் புராண இதிகாசச் செய்திகளும் அகச் சான்றுகளாக அணமிக்கின்றன. இத்தகைய பெருமைமிகு ஈழநாட்டில் அருள்வளமும், கலைவளமும் நிறைந்து விளங்கும் இணையிலி எனப் பெயர் கொண்ட இணுவிலின் வரலாற்றை ஆராய்வது நலம் என எண்ணுகிறேன்.

யாழ்பாடி தமிழ்க் குடியேற்றத்தினை,தொண்டைநாடு, பாண்டிய நாடு, சோழ நாடு ஆகிய இடங்களில் இருந்து அழைத்து வந்த தமிழர்கள் மூலம் நிறைவேற்றினார் எனப் பாரம்பரிய செய்திகள் மூலம் தெரிய வருகின்றது. இப்படி வந்த மக்களுடன் ஆந்திர மாநிலத்தில் இருந்து வந்த மக்களும் இடம்பெற்று இருத்தல் வேண்டும். தொண்டை நாட்டின் வேளிர் தலைவர் பேராயிரவர் தலைமையில் வந்த குடிகளோடு இனு குண்டா என்ற பேரூரில் இருந்தும் மக்கள் குடியேறியதாகவும் அவர்கள் இனு குண்டா எனத் தமது ஊர்ப்பேரை வைத்து அழைத்தனர் எனவும் எண்ணவேண்டியுள்ளது. வடுக வேளாளர் எனக் கூறப்படும் மக்கள் இன்றும் இணுவிலில் வாழ்கின்றனர். இப்பேர் சிங்கள மக்கள் தொடர்பினால் ஈற்றில் நின்றகுண்டு (நீர்நிலை)வில் என மொழியாக்கஞ் செய்யப்பட்டு இணுவில் என வழக்குப்பெறலாயிற்று எனலாம்.

தொண்டை மண்டலத்தை ஆண்ட தொண்டையர் மரபில் வந்த கருணாகரத் தொண்டைமானுக்கும் இணுவிலுக்கும் பெருந் தொடர்புண்டு. அஃதே போல் யாழ்ப்பாண மன்னர்களான பரராசசேகரன் செகராசசேகரன் என்போரும் இணுவில் வாழ்வில் கலந்து நிற்கின்றனர். இந்நோக்கில் பார்க்கும் பொழுது யாழ்ப்பாண வரலாறு கி.பி. 3ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கு வதாக உள்ளது. ஏனெனில் எல்லாளன் என்ற தமிழ் வேந்தனிடம் இருந்து யாழ்ப்பாடியால் மணற்றிடல் பரிசிலாகப் பெறப்பட்டதென வரலாற்றாசிரியர் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்றனர். தொண்டையர் கோன் கருணாகரத் தொண்டைமானின் ஆளும் கணத்தவரான கருணாகரா், பேராயிரவர், காலிங்கராயர் என்போர்,யாழ்ப்பாண அரசாட்சியில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் சைவமும் தமிழும் வளரப்பணி புரிந்த செய்திகள் வாய்வழிச் செய்தியின் மூலம் உறுதிப்படுகின்றது. எனவே கி.பி. 3ம் நூற்றாண்டில் தொடங்கிய யாழ்ப்பாணக் குடியேற்றம் 10 நூற்றாண்டுகள் கழிந்து கி.பி 13ம் நூற்றாண்டளவில் பெரும்நிலை அடைந்தது எனக் கொள்ளலாம். புதிய குடியேற்றம் 1000 ஆண்டுகள் தொடர்ந்து நிகழ்ந்தது என்று கொள்வதில் தவறில்லை தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் இருந்த தொடர்புகள் இதனை நிலைப்படுத்தும்.

மேற்குறித்த வரலாற்றுப் பின்னணியினைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணத் தலைநகரில் இருந்து காங்கேயன் பெருவீதியில் நாலாவது கல் எல்லையில் இருந்த 5 வது கல் எல்லைவரை நீண்டு சுன்னாகம் பெரிய மதவு என அழைக்கப்படும் குறிச்சி வரை பரந்து கிழக்கோரமாகச் சென்று உரும்பிராய் வரை வேரூன்றித் தெற்கே கோண்டாவில் வரை கிளை பரந்து தாவடிவரை மொட்டரும்பிச் சுதுமலைவரை பிஞ்சாகி உடுவில் எல்லை வரை காய் நிலை அடைந்து இணுவிலாகத் கனிந்தது எனலாம். இவ்வூர் ஓங்கார வடிவமைப்புடன் விளங்குகிறது.

செம்மண் வளமும் நன்னீர்க் கிணறுகளும் கொண்டமைந்த இவ்வூரின் வடக்கே மருதையனார் பெயர் கொண்டு விளங்கும் மருதனார்மடத்தில் பல்லப வைரவரும், கிழக்கே கருணாகரத் தொண்டமானின் பேராளரான கருணாகரரால் வழிபாடு செய்யப்பட்ட கருணாகரப் பிள்ளையாரும் (கருணாகரப் பரம்பரையினர் இன்றும் இணுவிலில் உள்ளனர்) தென் கிழக்கில் இணுவை அப்பர் பெரிய சன்னியாசியாரால் வணங்கப்பட்ட காரைக்கால் சிவனும், சிவன் கோயிலுக்கு நேர் மேற்கே கோண்டாவிலில் தெற்கு எல்லையில் பேராயிரவர் பரம்பரையில் வந்த முதல்வர் (முதலர்) வழிபட்ட சிவகாமி அம்மனும், சிவகாமி அம்மன் கோயிலுக்கு மேற்கே இணுவை அப்பர் பெரிய சன்னியாசியாரின் சமாதியில் எழுந்தருளியிருக்கும் மஞ்சத்தடிக் கந்தனும், அவர் மூதாதையரால் வழிபாடு செய்யப்பட்ட ஈழத்தின் அறுபடை வீடுகளில் ஒன்றாகக் கருதப்படும் இணுவில் கந்தசுவாமி கோவிலில் எழுந்தருளி யிருக்கும் முருகனும், பரராசசேகரப் பேராளரால் வழிபடப்பட்ட பரராசசேகரப் பிள்ளையாரும், மேற்கின் மத்தியில் செகராசசேகரன் பேராளரால் வழிபாடு செய்யயப்பட்ட செகராசசேகரப் பிள்ளையாரும், இணுவிலில் வாழ்விற்கு அருள் சுரக்கின்றனர் இவற்றைவிடச் சிறியதும் பெரியதுமான சிவாலயங்களும் அம்மையின் திருத்தலங்களும் நிறைந்து, சைவம் கமழும் இணையற்ற ஊராகத் திகழும் இடம் இணுவில் எனக்கூறுதல் பொருத்தமுடையது என எண்ணுகிறேன்.

சங்கச் சான்றோரான ஈழத்துப் பூதந்தேவனாருக்குப் பின் இணுவில் சின்னத்தம்பிப் புலவர், இணுவில் நடராசையர், புலவர் அம்பிகையாகனார் என்போர் குறிப்பிடத்தக்கவர். பின்னவர் இருவரும் தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு பூண்டு இருந்தனர். வேதாந்தத்தின் கனிவும் சித்தாந்தத்தின் சுவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்து பண்பாட்டின் வழிவந்த இணுவிலில் வேற்று மதத்தைத் தழுவிய இணுவிலார் ஒருவர் கூட இல்லை என்று கூறலாம். இத்தகைய பெருமையுடம் உடையது இவ்வூர்.

இணுவிலின் சித்தர் பரம்பரையில் காலிங்கராயன் கைலாயநாதன் முன்வைத்து எண்ணத் தகுந்தவர்கள். சித்துக்கள் கைவரப்பெற்றவர், கர்மயோகி, அவர் வாழ்ந்த இடத்தில் அவர் மரபில் வந்தவர்கள் இன்றும் இணுவிலில் வாழ்கின்றனர். அவரின் பெயரால் இளந்தாரிகோயில் ஆலயமும் அமைந்துள்ளது. பூத உடலோடு பேரருளிற் கலந்து என்ற செய்தியை வாய்மொழிச் செய்திகள் மூலம் கேட்டுள்ளோம். இச்செய்தி கற்பனை அல்ல. நவீன விஞ்ஞான உலக மாகக் கருதப்படும் இக்காலத்தில், காற்றோடு மனிதர்களும் படை அணிகளும் கலந்த செய்தி இன்றைய விஞ்ஞானிகளையும் சிந்திக்க வைத்துள்ளது. இது இயற்கையில் நிகழும் வியப்புக்குரிய செய்தியாகக் கருதப்படுகின்றது. உண்மையில் இயற்கை பிரமம், பிரம்மமே இயற்கை. சரியென்றும் பிழையென்றும் அழகென்றும் அழகற்றதென்றும் நாம் எண்ணுபவை எல்லாம் நம் அனுபவ நிலை கொண்டு உணர்பவை. பேரா இயற்கைப் பரம்பொருளின் திறம் உணர்ந்தவர்கள் "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" எனப் பகர்வர். வாழ்வு எப்படி அமைதல் வேண்டும் என எண்ணும் திண்ணியர் தமது ஆத்ம அனுபூதி மூலம் பேரா இயற்கையுடன் அதாவது பிரம்மத்துடன் இரண்றக் கலத்தில் வியப்பூட்டும் செய்தியன்று - நிகழக் கூடியதே. ஆத்ம ஞானிகள் மூவகைப்படுவர். முதல் தரத்தினர் தம் ஊர் பெயர் தெரியாது அடங்கி வாழ்ந்து இயற்கை நெறிக்கு உரம் ஊட்டுபவர். அத்தகையோரின் சிந்தனைகள் செயல்கள் மூலம் உருவாகின்றவர்கள் "உலகம் உவப்பு வலனேர்புதிரிதரு" ஞாயிறு போன்றவர்கள். இந்த ஞாயிற்றின் ஒளியால் வாழ்வு பெற்று அருட்கொடை கொடுப்பவர் மூன்றாம் படியினர். இத்தகைய மரபுநெறி வந்தவர்கள் இணுவிலில் தோன்றி உள்ளனர். முதல் நிலை உடைய ஆத்மஞானிக்கு - கர்ம யோகிக்கும் காலிங்கராயர் - கைலாயநாதனும், இரண்டாம் நிலைக்கும் பெரிய சன்னியாசியாரும், மூன்றாம் நிலைக்கு இணுவை நடராசையரும் அவர் மரபு வந்த மார்க்கண்டையரும் எடுத்துக்காட்டு. கைலாய நாதன் சிந்தித்து நெறிப்படுத்தியதை நடராசையர் உலகினுக்கு வெளிப்படுத்த இணுவை அப்பர் அதைச் செயல்படுத்தினார். மார்க்கண்டையர் அதற்கு உருக்கொடுத்தார்.

நடராசையர் வேப்பம் சருகு இலுப்பைச்சருகு என்பவற்றைக் கையிலேந்தி மந்திர சக்தியால் (மனோசக்தியால்) பாம்பாக ஓடச் செய்தார். பாம்புகளை அழைத்து அவற்றால் கடியுண்டோரின் நஞ்சினை எடுக்கச் செய்து பாம்புக்கும் கடியுண்டோருக்கும் வாழ்வழித்தார். இணுவை அப்பர் நிகழ்காலம் எதிர்காலம் கூறி மக்களை நெறிப்படுத்தினார். அதற்குச் சான்றாக இணுவில் மஞ்சமும், மஞ்சத்தடிக் கந்தசுவாமி கோயிலும் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவாமிக்கு இலக்கணம்

ஒருமுறை அன்பர் ஒருவர் சுவாமிகளைப் பார்த்து சுவாமி என்ற சொல்லுக்கு இலக்கணம் என்ன என்று கேட்டார். கேட்டவருடைய உள்ளத்திலே சுவாமியைப் பற்றி ஒரு இலக்கணம் இருந்தது. அதனைச் சுவாமி நன்கறிவார். ஒரு புன்முறுவல் பூத்து அருளினார்.

"மனிதருடைய பாவங்களுக்காகப் பாடுபடவும், அப்பாடுகளினால் பாவங்கள் பொடிபடவும் வகை செய்யத் தெரியாத அல்லது முடியாத பேர்வழிகள் உண்மையான சுவாமிகள் ஆகமாட்டார். கடவுளே மனித உருவத்தில் அவதாரஞ் செய்தால் ஒழிய மற்றவர்கள் எத்தனை சித்து ஆடினாலும் சுவாமி என அழைத்தல் கூடாது. சுவாமி எனுஞ் சொல் சுவாமியின்மேல் கொஞ்சம் பற்றுள்ள சகலருக்கும் சூட்டப்படும் ஒரு பொதுச் சொல்லாக இருக்கிறது. சுவாமி என்னும் சொல் ஆண்டவனுக்கும் அவன் அருள் வழிபட்டோருக்குமே வழங்கப்பட வேண்டியதொன்றாகும். மற்றையோருக்கு வழங்குவது மகாதாவறு; மகாபாவம். சாதாரண மனிதன் ஒருவன் அப்பட்டத்தை ஏற்றுக்கொண்டால் சுவாமி என்ற சொல்லின் புனிதத்தைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். அவதார புருஷர்களுக்கும் ஆண்டவனுக்குமே சுவாமி எனும் பட்டம் தகுதியானதாகும். பரமசிவனுக்கும் குருபரனாகி வந்து பிரணவப் பொருளை உபதேசம் செய்த சிவகுருவாகிய ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானுக்கே 'சுவாமி' என்ற பட்டம் தகும். அவர் அசுரரை அழித்து தேவர்களைக் காப்பாற்றிய பெருமையுடையவர் அல்லவா? விபூதி, உருத்திராக்கம், காவி ஆகிய மூன்றும் ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானின் சொந்தச் சொத்து. அதை அணியும் சுவாமிமார் தங்களை அதற்குத் தகுதியாளர்களாக்கிக் கொள்ள வேண்டும்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீராவியடி ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகர் ஆலயத்தில்
நால்வர் திருவுருச்சிலைக்கு, முறையான கிரியைகள் நடைபெற்று,
அகில இலங்கைத் திருமன்றத்தினரால் திருமுறை ஓதுதல் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட திருமணப் பட்டுப்புடைவைகள் மற்றும்
புடவைத்தினிசுகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

புடவைகளின் சாம்ராஜ்ஜியம்

# ரஞ்சனாஸ்

127, மெயின் வீதி, கொழும்பு-11.

தொலைபேசி : 2320824, 2320834, 2320900, 2471633
பெக்ஸ் : 2335294
வெப் : htt://www.ranjanaslk. Com
ஈ : மெயில் : info@ranjanaslk. Com

**Since 1946**

# Ranjanas
PVT.LTD.

**Specialist for Wedding Sarees**

**127, MAIN STREET, COLOMBO - 11**

Phone : 2320900, 2320824, 2320834
Fax : 2335294
E-MAIL : info@ranjanaslk. Com
Web : http//www.ranjanaslk. Com



பசுவதையை நிறுத்துவோம்
பசுவைக் காப்போம்.



ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்
ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்

இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு. நா. முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாண[illegible]ரம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org